**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**ஆணை நாள்: 04.06.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

……………

**வழக்கு எண்.NC907/F/2024 (SA8765/F/2021)**

**திரு. அ.வின்செண்ட்** .. மனுதாரர்

/எதிர்/

**பொதுத்தகவல் அலுவலர்/ உதவி இயக்குநர்**
**உள்ளாட்சி நிதித் தணிக்கை**
**உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை**
**நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.** .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 28.03.2024 அன்று இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மனுதாரர் கோரிய 3 இனங்களுக்கான தகவல்களுக்கு முழுமையான தகவல்களை பொதுத் தகவல் அலுவலகத்திலுள்ள ஆவணங்களின் அடிப்படையில் 7 தினங்களுக்குள் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. இந்நிலையில் மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் ஆணையை நிறைவேற்றவில்லை எனத் தெரிவித்து, 28.12.2024 நாளிட்ட ஆணை நிறைவேற்றப்படாமை மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில், மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று காணொளிக் காட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு அ. வின்செண்ட் அவர்கள் விசாரணையில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. ப. பொன்னுசாமி, உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை. நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 08.01.2021 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், நாகர்கோவில் உள்ளாட்சி நிதி தணிக்கை உதவி

இயக்குநரது ந.க.எண் 303/இ2/2020 நாள் 04.05.2020 கடிதத்தில் நீதிமன்ற ஆணையில் நீதிமன்ற ஆணை மீது தணிக்கைத் தடை ஏதும் எழுப்பப்படவில்லை என்று தகவல் வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையில் 01.01.1993 முதல் ஊதியம் வழங்க வயது மற்றும் கல்வித் தகுதியினை பரிசீலனை செய்து தொடர்பான தகவல்களை வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் ஏற்கனவே ந.க.எண் 27/இ/2/2021 நாள் 05.02.2021 மற்றும் ந.க.எண் 51/இ2/2021 நாள், 08.02.2021 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர், 17.02.2021 நாளிட்ட பிரிவு **19(1)**-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் ஏற்கனவே, ந.க.எண் 206/அ1/2021 நாள் 05.04.2021 கடிதத்தின் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர், 30.06.2021 நாளிட்ட பிரிவு **19(3)**இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார்.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், ஆணையத்தின் ஆணைக்குப் பிறகு மனுதாரருக்கு ஏற்கெனவே கடித ந.க.எண்256/இ2/2024 நாள் 02.04.2034 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கு சமர்ப்பித்தார். மேலும் மனுதாரர் பணி நியமனத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக 2012-2013 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் தணிக்கைத் தடை எழுப்பப்பட்டுள்ளது. மனுதாரர் தனது பெயரில் எழுப்பப்பட்டுள்ள தணிக்கை தடையினை நீக்கம் செய்ய நிர்பந்திக்கும் நோக்கத்தில் தொடர்ந்து 90க்கும் மேற்பட்ட மனுக்களை அனுப்பியுள்ள நிலையில், இவ்வலுவலக ஆவணங்களின் அடிப்படையில் உள்ள தகவல்கள் உரிய காலத்திற்குள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என ஆணையத்தில் எடுத்துரைத்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத நிலையில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரர் பிரிவு 6(1)இன் கீழ் கோரிய மனுவில் இனம் 1 மற்றும் இனம் 2இல் எவ்வித தகவல்களையும் கோரவில்லை. இந்நிலையில் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல்கள் போதுமான தகவல்கள் என ஆணையம் உறுதி செய்கின்றது. இனம் 3இல் பணிக்கு வருகை தரவில்லை என்றாலும் தொகுப்பூதியம் முழுமையாக வழங்கலாம் என்பதற்கு ஆதாரமான அரசாணை நகலினை பொத்தாம்பொதுவாக எவ்வித அரசாணை எண் மற்றும் நாள் குறிப்பிடாமல் அனுமானத்தின் அடிப்படையில் கோரப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும், பொதுத் தகவல் அலுவர் இனம் 3க்கு வழங்கிய தகவல்களை ஆணையம் ஏற்கின்றது. எனவே, இனிவருங்காலங்களில் மனுதாரர் பிரிவு 6(1)இன் கீழ் கோரும் தகவல்களை தெளிவாக குறிப்பிட்டு கோரி உரிய பொது அதிகார அமைப்பிடம் புதிதாக மனுசெய்து பெற்றுக் கொள்ளமாறு ஆணையம் அறிவுறுத்துகின்றது. மேலும், இவ்வழக்கில் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல்கள் ஆவணங்களின் அடிப்படையில் வழங்கிய தகவல்கள் என இவ்வாணையம் உறுதி செய்து, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் ஆணை நிறைவேற்றப்படாமை மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC907/F/2024 (SA8765/F/2021)</u>**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

**பெறுநர்**
**பொதுத்தகவல் அலுவலர்/ உதவி இயக்குநர்**
**உள்ளாட்சி நிதித் தணிக்கை**
**உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை**
**நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.**

**<u>வழக்கு எண். NC907/F/2024 (SA8765/F/2021)</u>**
**<u>மனுதாரர்</u>**

**திரு. அ.வின்செண்ட்,**
**சரல்விளை, மேற்கு நெய்யூர் அஞ்சல்**
**கன்னியாகுமரி மாவட்டம்.**

Copy to: Judgement File/ Spare.
JE / PA 05.06.2025